# Restrictions on Freedom of Speech and Expression- A Comparative Study of Both Islamic Law & Constitutional Law

M.M. Shiyana

*Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*

*shiyana@seu.ac.lk*

***ABSTRACT***

*The freedom of speech and expression is considered a basic right to express one's opinions, feelings, and thoughts without interference, hindrance and control. This study attempts to compare the limitation on the freedom of speech and expression under the Sri Lankan constitutional Law and Islamic law. This qualitative study prepared based on primary and secondary data such as al-quran, hadeedh, legislation, Case Studies, books, research articles and internet resources. The collected data were analyzed using descriptive and comparative methods. According to the results, Article 15 (2), (7) of Sri Lankan constitution of 1978 refers to the limitation on freedom of speech and expression and Article 15 (1)(2) imposes some restrictions on freedom of speech such as Ethnical religious harmony, parliamentary privilege, contempt of court, defamation, instigating crimes and public moral as like Islamic law restricts any kind of speech and expression that violates basic human rights. Most of the limitations on freedom of speech assured by the constitution match with Islamic legal views. However, the Islamic shariah is more concerned the production of life, equality, justice, public welfare, propagation of evils and securing human dignity with various moral and legal bindings than the Sri Lankan constitution Rules. This study supports to dissolve the bad intention about Islam and to strengthen the opinion of freedom of speech and expression among public. This study also presents some recommendations for future researches regarding the position of freedom of speech in other religion.*

***Key words****: Freedom of Speech, Expression, Constitutional Law, Islamic Sharia*

---

## *1. Introduction*

கருத்து சுதந்திரம் என்பது ஒருவரின் கருத்துக்களை எழுத்து மற்றும் பிற வழிகள் மூலம் எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி தகவல்களை பெறவும் தேடவும் பகிரவும் முடியுமான அடிப்படை உரிமையாக கருதப்படுகிறது. இது வெறுமனெ குரல்களை மாத்திரம் கொண்டு வெளிப்படுத்தம் சுதந்திரமாக அல்லாது ஒருவரின் எண்ணங்களை வெளிப்படுத்தும் உடலின் செயல்களையும் குறிக்கிறது. ரெட்சுவானின் கருத்துப்படி கருத்து சுதந்திரம் என்பது தலைவர்களுக்கும் தலைமைக்கும் இடையேயான தகவல் தொடர்பு சிக்கல்களை சமாளிக்கக்கூடிய ஒரு வழியாக இருக்கிறது *(Asma, 2017)*. யுனெஸ்கோ உலகளாவிய பிரகடனத்தின் 19ஆம் சரத்தின் பிரகாரம் ஒவ்வொருவரும் பிறரின் தலையீடு இல்லாமல் தமது கருத்துக்களைக் கொண்டிருக்க உரிமையளிக்கிறது. எனினும் இச்சுதந்திரத்தை பயன்படுத்துவதானது சட்டத்தால் குறிப்பிடப்படும் சில கடப்பாடுகளுக்கும் உட்பட்டது *(UNESCO, 2000)*. *ICCPR* பிரிவு *19* ஒவ்வொருவரும் பிறரின் கருத்துக்கள் மற்றும் தலையீடின்றி தமது கருத்துக்களை கொண்டிருக்க உரிமையையும் *20*ஆம் சரத்தானது தேசிய இன, மத வெறுப்பை தூண்டக்கூடிய பாகுபாடு, விரோதம் மற்றும் வன்முறையை ஏற்படுத்தக்கூடியதுமான செயல்கள் சட்டத்தால் தடை செய்யப்பட வேண்டுமெனவும் குறிப்பிடுகிறது *(ICCPR Artice, 20)*. *1978*ஆம் ஆண்டு இலங்கையின்


ISBN: 978-624-5736-55-3

அரசியலமைப்பின் பிரிவு 14 (1) ஒவ்வொரு குடிமகனும் கருத்து சுதந்திரம் மற்றும் வெளியீடு தொடர்பில் சுதந்திரமாக செயல்பட உத்தரவாதம் அளிக்கிறது. இச்சுதந்திரமானது பொது அதிகாரிகளின் உத்தரவுகள், சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் மற்றும் நீதிமன்றங்களால் உச்சரிக்கப்படும் தீர்ப்புகளுக்கும் உட்பட்டதாகவேயுள்ளது (Jayamanne, 2004). இஸ்லாத்தில் கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை அல்குர்ஆன் 1400 வருடங்களுக்கு முன்னமே முழு மனித இனத்துக்கும் வழங்கியுள்ளது. எனினும் பயன்பாடானது பிறர் கண்ணியம், மரியாதை, சுதந்திரம், சிந்தனை வெளிப்பாடு, தீங்கிலிருந்து பாதுகாத்தல் என்பனவற்றை கருத்திற் கொள்கிறது (Saeed & Ahamed, 2013)இஸ்லாத்தில் அடிப்படை மனித உரிமைகளானது இஸ்லாமிய ஷரிஆவின் கொள்கைகளுக்கு முரணில்லாத வகையில் அமைந்திருத்தலை மனித உரிமைகள் பற்றிய கெய்ரோ பிரகடனத்தின் பிரிவு 22; கருத்திற் கொள்கிறது (Irmgard marboe,2018).

சயீத், ரியாஸ் அகமட் (2013) ஆகியோரால் எழுதப்பட்ட நவீன சமூக அரசியல் சூழலில் அல்குர்ஆனில் கருத்து சுதந்திரம் எனும் ஆய்வுக் கட்டுரையில் கருத்து சுதந்திரம் குறித்த அல்குர்ஆனின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதுடன் எதிர்மறையான சமூக தாக்கங்களில் இருந்து சமூகத்தை காப்பாற்றுவதற்கான கருத்து சுதந்திர வரம்புகளும் ஆராயப்பட்டுள்ளன. ரபீக், ஆயிசா, நசீம் (2018) ஆகியோரின் ஆய்வொன்றில் இஸ்லாமிய பேச்சு சுதந்திர உரிமையின் பயன்பாடு குறித்தும் பேச்சுரிமையின் சமகால மதச்சார்பற்ற புரிதலும் அது தொடர்பான சர்வதேச சட்ட ஆவணங்களின் நிலைப்பாடு தொடர்பிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பட் (2014) என்பவரின் ஆய்வில் இஸ்லாமிய கருத்து சுதந்திர கொள்கைகள் மற்றும் மேறக்கத்தேய கருத்து சுதந்திர எல்லை தொடர்பில் விளக்கப்பட்டுள்ளன. ரஸா (2016) என்பவரின் ஆய்வொன்றில் இந்தியாவில் பேச்சு மற்றும் கருத்து சுதந்திர உரிமை அரசியலமைப்பு முன்னோக்கில் பரிசீலிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன பெரும்பாலான ஆய்வுகள் இஸ்லாமிய கருத்து சுதந்திரத்துடன் பகுதியளவில் தொடர்புபட்டிருந்தாலும் ஒரு நாட்டினுடைய அரசியலமைப்பு விதிகளுடன் தொடர்புபடுமாற்று கருத்திற்கொள்ளப்படவில்லை. எனினும் தற்போதைய ஆய்வினை முன்னெடுப்பதற்காக இவை துணைப் பங்களிப்பு செய்துள்ளன.

தற்போதைய ஆய்வானது இலங்கை அரசியலமைப்பில் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் காரணிகளை இஸ்லாத்தில் கருத்து சுதந்திரம் தொடர்பான வரம்புகளுடன் ஒப்பு நோக்க விளைகிறது. ஏனெனில் இஸ்லாமிய சட்டங்கள் பன்மைத்துவ சட்டங்களுடன் முரண்படுவதாகவும் ஷரிஆவின் வழிகாட்டுதல்கள் வெறும் ஆன்மீக கருத்துக்களுடன் சுருங்கி விட்டதாகவும் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன (Lombardi,2013)குறிப்பிட்ட மதத்தின் போதனைகளானது பிற மதத்தை சார்ந்துள்ள மக்களின் நெறிமுறை இணைப்புக்கு நேர்வாக அமையுமாயின் அவற்றின் உள்ளடக்கம் முக்கியமானதாகும். குறிப்பிட்ட குழுக்கள் மற்றும் மதங்களுக்கிடையில் எழும் பரந்தளவிலான உரிமைசார் பிரச்சினைகளுக்கு பதிலளிக்கப் போதுமான ஒரு சட்ட நெறிமுறையை இஸ்லாமிய சட்டம் வழங்க முடியுமா? என்ற கேள்வியின் பின்னணியில் தற்காலத்தில் ஜனநாயக விதிமுறைகளில் இஸ்லாமிய சட்டங்களின் பொறுத்தப்பாடு பற்றி ஆராய வேண்டியுள்ளது. குறிப்பாக கருத்து சுதந்திர உரிமை மற்றும் அதன் மீதெழும் சர்ச்சையானது சமகால சமூக அரசியல் களங்களில் விவாதத்திற்குரிய பொருளாக மாறியுள்ளது. கடந்த காலங்களில் சில குழுக்கள் கருத்து சுதந்திரம் எனும் பெயரில்

*மதவெறுப்பையும் இனவாதத்தையும் தூண்டிவிட்டு மக்கள் மத்தியில் குரோதத்தையும் நாட்டில் வன்முறைகளை ஏற்படுத்த முனைவதையும் அறிய முடிகிறது. ஜனநாயக சமுதாயத்தில் கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பது முக்கியமானதாக இருப்பினும் அதனை முழுமையான உரிமையாகவோ அல்லது கட்டுப்பாடற்ற உரிமையாகவோ ஆக்கிவிட முடியாது. எனவே இப்பிரச்சினைகளை கருத்திற் கொண்டு இலங்கை அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள கருத்து சுதந்திர உரிமை மீதான வரம்புகளை அறிதல் அவசியமாவதுடன் அவற்றை இஸ்லாத்தில் கருத்து சுதந்திரம் மீதான கடப்பாடுகளுடன் ஒப்பிடல் பிரதான ஆய்வு நோக்காகவும் இருக்கிறது.*

***2. Research Methodology***

*முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை மையப்படுத்திய பண்புரீதியான இவ்வாய்வானது உள்ளடக்கப் பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறைகளை தழுவியது. அல்குர்ஆன், அல்ஹதீஸ், ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சட்ட ஆவணங்கள் மற்றும் இணைய வளங்கள் என்பன மீளாயப்பட்டு ஆய்வுக் கோட்பாட்டினைப் பெற்றுள்ளது. ஆய்வுப் பெறுபேறுகள் ஒப்பீட்டு மற்றும் விபரிப்பு முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன.*

***3. Results and Findings***

*பேச்சு சுதந்திரமானது ஜனநாயகத்தின் அடிப்படையாகவும் அரசியல் அரங்கில் பிரிக்க முடியாததாகவும் காணப்படுகிறது. இவ்வுரிமையானது அரசியல், பொருளாதார, சமத்துவ விதிகள், உயிர், மனித கண்ணியத்திற்கான உத்தரவாதம், உச்ச நீதிமன்றத்தின் உரிமை ஆகியவற்றால் பரந்த அளவில் விளக்கப்படுகிறது (Rasa, 2016). இலங்கையின் இரண்டாவது குடியரசு 1978 அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 14 (ஐ) (ய) இன்படி ஒவ்வொரு குடிமகனுக்கும் பேச்சு, வெளியீடு போன்ற சுதந்திரங்களுக்கான உரிமையையும் பிரிவு 15 (2),(7) என்பவற்றில் அவற்றின் மீதான சில கட்டுப்பாடுகளையும் விதிக்கிறது. பிரிவு (15)(1)இன் பிரகாரம் இன மத நல்லிணக்க நலன்கள், பாராளுமன்ற சிறப்புரிமைகள், நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு, குற்றத்திற்கு தூண்டல் ஆகியன கருத்து சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. இதன்படி ஒருவர் தனது சுதந்திரங்களை பயன்படுத்துவதில் அரசியலமைப்பு சட்டங்கள் மற்றும் மற்றவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் தேசிய நலனை மேம்படுத்தவும் பொதுச் சொத்துக்களை பாதுகாக்கவும் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் (Constitution of the Republic, 1978) சுதந்திரமான கருத்து மற்றும் சிந்தனையின் வெளிப்பாடானது தேசிய பாதுகாப்பு, பொது சுகாதாரம், பொது ஒழுங்கு, மற்றவரின் உரிமைகள் ஆகியவற்றை பாதிக்கும் இடங்களிலும் சட்டத்தால் பரிந்துரைக்கப்படும் கடப்பாடுகளுக்கு உட்பட்டது (Jayamanne,2004).*

*இஸ்லாத்தில் கருத்து சுதந்திரமானது முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத அனைவருக்குமுரிய அடிப்படை உரிமையாக கருதப்படுகிறது. இவ்வுரிமையானது சமத்துவம், நீதி, மனித கண்ணியம், பாதுகாப்பு, சிந்தனை, சமுதாய நலன், மரியாதை போன்ற பிற உரிமைகளுடன் தொடர்புடையதாயிருக்கிறது. இஸ்லாமிய ஷரிஆ மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதுடன் இஸ்லாமிய சட்டக் கோட்பாடுகளும் தீங்கு அகற்றப்பட வேண்டும் என பிரகடனப்படுத்துகிறது* ***"அநியாயம் செய்யப்பட்டவர்களை தவிர வேறு யாரும்***

***வார்த்தைகளில் தீயவற்றை பகிரங்கமாக கூறுவதை அல்லாஹ் விரும்பவில்லை. அல்லாஹ் நன்கு செவியுறுபவனாகவும் யாவற்றையும் அறிபவனாகவும் இருக்கின்றான்”*** *(அல்குர்ஆன் 4:148). இவ்வசனத்தில் ஒரு கட்டளையோ அல்லது மீறுதலுக்கான தண்டணையோ குறிப்பிடப்படவில்லை. மாறாக அது நெறிமுறையான ஆலோசணைகளையும் வழிகாட்டுதல்களையும் கொண்டுள்ளது. இருப்பினும் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு ஒரு விதிவிலக்கை கொண்டுள்ளதுடன் அனைத்து வகையான வெறுப்பூட்டும் பேச்சுக்களும் பகிரங்கமாக புண்படுத்தும் நடத்தைகளும் தடைசெய்யப்பட்டுள்ளன (kamali,1997). ஷரிஆவின் முதன்மை நோக்கம் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றும் முயற்சியில் மற்றவர்களுக்கு கண்ணியம் வழங்குவதும் இறைவனின் கட்டளைகளையும் நபியவர்களின் போதனைகளையும் பின்பற்றுவதும் தனக்குரிய சுதந்திரத்தை வரையறையுடன் பயன்படுத்தும் வரை தாம் விரும்பியபடி செயல்படுவதற்கு சுதந்திரம் வழங்குவதுமாகும் (Al-Raysuni,2006).*

### *3.1 மத, இன நல்லிணக்க நலன்கள் (Ethnical Religious harmony)*

*கருத்து சுதந்திரத்தின் மீது தடையை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாக இன, மத நல்லிணக்கம் விளங்குகிறது. இலங்கை அரசியலமைப்பின் கட்டுரை 10இன் பிரகாரம் ஒவ்வொரு நபரும் சிந்தனை மனசாட்சி உட்பட அவர் விரும்பும் மதம் அல்லது நம்பிக்கையை வைத்திருக்கவும் ஏற்றுக்கொள்ளவும் உரிமையுண்டு (Constitution of the Republic, 1978). இலங்கை குற்றவியல் தண்டனை சட்டக்கோவையின் பிரிவுகள் 290-292களில் எந்தவொரு வகுப்பினரின் மதத்தையும் அவமதிக்கும் செயல்கள் மற்றும் பேச்சுகள் தடை செய்யப்பட்டுள்ளன. அதே போல இஸ்லாத்தில் எந்த நபரும் எந்தவொரு மதத்தை விசுவாசம் கொள்ளவும் அவரவர் விரும்பிய மதக்கொள்கைகளை பின்பற்றவும் சுதந்திரமுண்டு. ஒருவர் தமது மதக்கடமைகளை கடைபிடிக்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் யாரும் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகிறது.* ***“இம்மார்க்கத்தை தழுவுவதில் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி மிகத்; தெளிவாகிவிட்டது”*** *(அல்குர்ஆன் 2:256). எனவே இஸ்லாமிய சட்டத்தில் ஒருவரின் மத இன நலன்களுக்கு எதிராக கருத்து சுதந்திரத்தை பிரயோகிக்க முடியாது (Asma, 2017).*

*நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை தனது படைகளை அனுப்பியபோது, ‘’துறவறங்களில் வசிப்பவர்களைக் கொல்லாதீர்கள்’’ என்று கூறியதாக அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். எனவே மத நம்பிக்கைகள், புனித தளங்கள், நினைவுச்சின்னங்களின் பாதுகாப்பிற்கான உரிமையை மீறும் வன்முறைச் செயலும் அல்லது விரோதத்தைத் தூண்டும் நோக்கம் கொண்ட எந்தவொரு வெளிப்பாடும் இஸ்லாமிய சட்டத்தின் கீழ் குற்றமாகும். வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களுடனான விவாதங்கள் மற்றும் உரையாடல்களில் நல்ல நடத்தைக்கு உறுதியளிக்காத எந்தவொரு பேச்சையும் இஸ்லாம் குற்றமாக்குகிறது.* ***“ஞானத்துடனும் நல்ல உபதேசத்துடனும் உங்கள் இறைவனின் பாதையில் அழைக்கவும், மேலும் அவர்களுடன் சிறந்த முறையில் விவாதம் செய்யவும”*** *(அல்குர்ஆன் 16:126). மேற்கூறிய அல்குர்ஆன் வசனம் கருத்து சுதந்திர விடயத்தில் நல்லதை ஆதரிக்கும் படி கூறுவதுடன் தீமையை ஏற்படுத்தும் கருத்தையும் இது தடுக்கிறது. வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களுடனான விவாதங்கள் மற்றும் உரையாடல்களில் நல்ல நடத்தைக்கு உறுதியளிக்காத எந்தவொரு பேச்சையும் இஸ்லாம்*


ISBN: 978-624-5736-55-3

*குற்றமாக்குகிறது. எனவே மத இன நல்லிணக்கத்தை பேணும் விடயத்தில் இலங்கை அரசியலமைப்பு விதிகள் இஸ்லாமிய விதிகளுடன் பெரும்பாலும் பொருந்துவதைக் காணலாம்.*

### *3.2 அவதூறு (Defamation)*

*பேச்சு சுதந்திரம் என்பது பிறர் உரிமைகள் மீது ஆக்கிரமிப்பற்ற வகையில் ஒருவர் தன் கருத்துக்களையும் உணர்வுகளையும் தனது சொந்த விருப்புடன் வெளிப்படும் உரிமையாகும். ஒவ்வொரு நபரும் அடிப்படையில் தனது நற்பெயரை பேணுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார். எனவே ஒருவரின் நற்பெயரை களங்கப்படுத்தும் செயற்பாடுகள் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளன (குற்றவியல் தண்டனைக் கோவை பிரிவு 157).*

*இஸ்லாமிய சட்டத்தில் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதற்கான அடுத்த முக்கிய காரணம் மனித மரியாதை மற்றும் கண்ணியம் ஆகும். மலேசியாவின் புகழ்பெற்ற அறிஞரான டாக்டர். முஹம்மது ஹாஷிம் கமலி கூறுகிறார், "கருத்துச் சுதந்திரமானது மனித கண்ணியத்தை பாராட்டுகிறது. ஏனெனில் ஒருவரின் குணம் மற்றும் ஆளுமையின் சாராம்சமானது அவரின் கருத்திலும் தீர்ப்பிலும் பிரதிபலிக்கிறது'' (Riaz, 2016).* ***" நிச்சயமாக நாம் ஆதமுடைய சந்ததியை கண்ணியப்படுத்தினோம்"*** *(அல்குர்ஆன் 17:70).*

*மேற்குறித்த அல்குர்ஆன் வசனமானது மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் கண்ணியத்திற்குரியவர்கள் என்கிறது. எனவே, பிறர் மீது அவதூறு கற்பிப்பது பெரும்பாவமாகும். பிறர் மானத்துக்கு இழுக்கை ஏற்படுத்தும் கருத்து சுதந்திரத்தை இஸ்லாம் ஒரு போதும் அனுமதிப்பதில்லை. நபி (ஸல்) அவர்கள் தமது இறுதி பிரசங்க நாளில் மனித கண்ணியத்தை பின்வருமாறு வலியுறுத்தினார்கள்,* ***"பிற முஸ்லிமின் இரத்தம், மானம் மற்றும் சொத்துக்கள் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் தடைசெய்யப்பட்டுள்ளது"*** *இந்த வகையில் ஒருவருக்கு அவதூறு ஏற்படுத்தும் கருத்து சுதந்திரத்தை இஸ்லாம் ஒருபோதும் அனுமதிக்காது. உண்மையை வெளிப்படுத்தல், புரிந்துணர்வை வளர்த்தல் மற்றும் பிறர் கண்ணியம் காத்து நல்ல கருத்துக்களின் மூலமாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகியன இஸ்லாமிய கருத்து சுதந்திரத்தின் நோக்காக இருப்பதால் இதற்கு மாற்றமான மனித சுதந்திரத்தை இஸ்லாம் வன்மையாக கண்டிக்கிறது (Bhat,2014).*

*மேலும் அனைத்து இஸ்லாமிய மத்ஹப்களும் இறை தூதர்களை அல்லது புனித நூல்களை அவமதிப்பது, கேலி செய்வது, அறிக்கைகள், கட்டுரைகள் அல்லது கார்ட்டூன்கள் மூலம் தவறாக சித்தரிப்பது அவதூறு கூறுவது என்பவற்றை குற்றமாகவும் இஸ்லாமிய சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ள முடியாததெனவும் ஒப்புக்கொள்கிறது (The Kuwaiti Encyclopedia,2020). இஸ்லாமிய சட்டத்தில் ஒருவர் அவதூறு கூறி அதை நான்கு சாட்சிகள் கொண்டு நிருபிக்க தவறினால் அவர் குற்றவியல் ரீதியாகவும் பொறுப்பேற்க வேண்டும் (Asma, 2017). எனவே அவதூறு தொடர்பான இஸ்லாமிய கட்டுப்பாடுகள் அரசியலமைப்பினால் குறித்துரைக்கப்படும் கருத்து சுதந்திர கட்டுப்பாடுகளுடன் ஒத்துச் செல்கின்றன. எனினும் அதற்கான தண்டணையை வழங்குதல் தொடர்பில் அரசியலமைப்பு சட்டங்களை விடவும் இஸ்லாமிய குற்றவியல் தண்டணை முறைகள் பரந்துபட்ட தன்மையை கொண்டிருக்கின்றன.*


ISBN: 978-624-5736-55-3

இஸ்லாத்தில் பேச்சு சுதந்திரம் வரம்பற்றது அல்ல. மாறாக அதன் மீது சில நியாயமான சமூக மற்றும் தார்மீக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஒருவர் தனது தனிப்பட்ட நலனுக்காக வேறு யாருக்கும் தீங்கு செய்தல் இஸ்லாமிய சட்டத்தில் அனுமதிக்கப்படாது. டாக்டர் அன்வர் அல்-ஜுண்டி கூறுகிறார், "இஸ்லாம் மக்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதன் மூலம் சமூகத்திலுள்ள ஏனைய மக்களுக்கு தீங்கு விளைவிக்கவோ அல்லது துஷ்பிரயோகம் செய்யவோ கூடாது என்கிறது" இதன்படி முழுமையான சுதந்திரம் மனிதனுக்கு பயனளிக்காது என்பதை இஸ்லாம் புரிந்துகொள்கிறது (Riaz,2016). எனவே இலங்கை அரசியலமைப்பு விதிகளை விடவும் இஸ்லாமிய தெய்வீக சட்டம் எடுத்தியம்பும் விதிகள் மற்றும் சட்டக்கட்டுப்பாடுகள் இறை சட்டத்தின் வியாபித்த தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

***3.3 தூண்டல் (Incitement)***

சட்டத்தால் அனுமதிக்கப்படுவதும் தற்போது நடைமுறையில் உள்ளதும் எந்தவொரு தண்டிக்கப்படக் கூடியதுமான செயல் அல்லது அதற்கான தூண்டல் கருத்துச் சுதந்திரத்தின் மீதான தடையை ஏற்படுத்தும். குற்றத்துக்கான தூண்டுதல் தொடர்பான குற்றச் செயல்கள் குறித்து தண்டனைச் சட்டத்தின் பிரிவு 100-110 குறிப்பிடுகிறது (Sri Lanka law, 2020). இதன்படி குற்றத்துக்கான தூண்டுதலானது ஊக்குவிப்பு, குற்றத்துக்கு ஆதரவளித்தல், வெளியிடுதல், விநியோகித்தல், பாகுபாடு, விரோதம் அல்லது வன்முறையைத் தூண்டும் அனைத்து செயல்களையும் உள்ளடக்கியது. அதே போல இஸ்லாமிய சட்டமும் வன்முறையைத் தூண்டும் அனைத்து செயல்களையும் சொற்களையும் குற்றத்துக்கான தூண்டுதலாக காண்கிறது (Maherholi, 2008). இதனை பின்வரும் அல்குர்ஆன் வனத்தின் மூலம் அறியலாம், "**மேலும் புனித மஸ்ஜிதை (கஃபத்துல்லாஹ்வை) விட்டும் உங்களைத் தடுத்த கூட்டத்தினர் மீதுள்ள வெறுப்பானது நீங்கள் வரம்பு மீறுமாறு உங்களைத் தூண்டிவிட வேண்டாம். இன்னும் நன்மையிலும் பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்திலும் பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம்"** (அல்குர்ஆன் 5:2). எனவே ஒருவர் மீதுள்ள வெறுப்பைக் காரணமாகக் கொண்டு அவருக்கெதிராக அநீதியிழைக்கவோ அல்லது குற்றமிழைக்க தூண்டுவதாகவோ தனது கருத்து சுதந்திரத்தை பயன்படுத்த முடியாது. இஸ்லாமிய சட்டத்தில் வெறுப்பு பேச்சு அல்லது தூண்டுதல் காரணமாக குற்றம் இழைக்கப்பட்டால், அந்த பேச்சை ஊக்குவிப்பவரும் ஒரு கூட்டாளியாக கருதப்படுவார் மற்றும் அதற்கான தண்டனைக்கு உட்படுத்தப்படுவார். இஸ்லாமிய அறிஞரான கமால் முகம்மது குறிப்பிடுவது போல சட்ட விரோதத்தை ஆதரிக்கும் எந்தவொரு செயலும் அல்லது அதற்கு நிதி உதவி வழங்குதல், பாதுகாத்தல், வெறுக்கத்தக்க பேச்சைப் பரப்புவதற்கு உதவுதல், கூட்டங்கள், மாநாடுகளை நடத்துதல் அல்லது அதில் பங்கேற்பதன் மூலம் இந்தப் பேச்சை விளம்பரப்படுத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குதல் ஆகியனவும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டது ஆகும் (Kamal, 2010). எனவே குற்றத்துக்கான தூண்டுதல் எனும் விடயத்தில் கருத்து சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதில் இஸ்லாமிய சட்டப்போதனைகளும் நாட்டின் அரசியலமைப்பு விதிகளும் பெரும்பாலும் ஒரே போக்கை கொண்டுள்ளன. எனினும் சில அடக்குமுறையான ஆட்சி அதிகாரத்துக்கு எதிராக மக்களால் முன்வைக்கப்படும் கருத்து சுதந்திரமானது அவர்களின் உரிமையை பெறுவதற்கான கருவியாகவும் இருக்கிறது. எனவே கருத்து சுதந்திரமானது வன்முறைகளை ஏற்படுத்தாது ஒழுக்கத்தின் எல்லைக்குள் இருப்பதையே இஸ்லாம் வலியுறுத்துகிறது (Ayesha & Naseem, 2018).


ISBN: 978-624-5736-55-3

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு யூதருக்கும் அரேபியருக்கும் இடையில் தீர்க்கதரிசனத்தின் மேன்மை குறித்து சண்டையிடப்பட்டது போது முஸ்லிமானவர் தனது வாதத்தை அணுகிய விதம் யூதனின் உணர்வுகளை காயப்படுத்தியது. இது பற்றி நபியவர்களிடம் முறையிடப்பட்ட போது அதற்கவர்கள் அந்த முஸ்லிமை கண்டித்து என்னை மூஸாவுக்கு மேலாக உயர்த்தாதே என்றார்கள். எனவே இந்த முன்மாதிரியும் உயர்ந்த மரியாதையும் ஒருவரின் கருத்து வெளிப்படுத்தலில் பிரதிபலிக்க வேண்டுமே தவிர பிறர் மத்தியில் வன்மத்தை தூண்ட வழியேற்படுத்தக் கூடாது என்பதை மேற்குறித்த சம்பவத்தில் இருந்து அறியலாம் *(Bhat, 2014).* இஸ்லாமிய அறிஞரான குலாம் ஹசன் மாலிக் எழுதுகிறார், நாகரீக சமுதாயத்தில் பேச்சு சுதந்திரத்திற்கு சில நியாயமான வரம்புகளையும் கட்டுப்பாடுகளையும் வைப்பது அவசியமாகும் என்பதால் இஸ்லாத்தில் கருத்து சுதந்திரமானது முழுமையானது அல்ல மாறாக பொறுப்பானதாகும் *(Riaz, 2016).* எனவே குற்றத்திற்கு தூண்டுதலாக அமையும் செயல்கள் மீது சட்டக் கட்டுப்பாடுகளை விதிப்பது இஸ்லாமிய கொள்கைகளுக்கு இணங்கியதாகும். இவ்விடயத்தில் இலங்கை அரசியலமைப்பு விதிகளுடன் இஸ்லாமிய சட்ட ஒழுங்குமுறைகள் நேர்மறையான தன்மையைக் கொண்டிருக்கின்றன.

### *3.4 தேசிய பாதுகாப்பு (National Security)*

ஒருவரின் கருத்து சுதந்திர உரிமையின் மீது வரம்பினை ஏற்படுத்தும் மற்றுமொரு காரணியாக தேசிய பாதுகாப்பு விளங்குகிறது. தேசிய பாதுகாப்பு நலன்கள் கருதி பயங்கரவாத தடுப்பு சட்டம் மற்றும் பொதுப் பாதுகாப்பு ஆணை, பொது ஒழுங்கைப் பேணல் போன்ற சில சட்டங்கள் நாட்டில் அமுல்படுத்தப்படுகின்றன *(Welikala, 2008).* அரசுக்கு எதிரான கலகம், குற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தவறான அறிக்கைகளை பரப்புதல், அநோமதய தொடர்புகள் மூலம் குற்றவியல் மிரட்டல்களை மேற்கொள்ளல், அமைதியை மீறும் வண்ணம் மேற்கொள்ளும் அவமதிப்புகள், சட்ட விரோதமான உறுதி மொழிகள் என்பன சட்டத்தால் தடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் சட்டத்தால் குறிப்பிடப்படும் குற்றச்செயல்கள் சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட சில பொது விதிவிலக்குகளுக்கு உட்பட்டு இருப்பதையும் அவதானிக்க வேண்டும் *(Country Report, 2010).*

ஒரு இறையடியான் இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளைப் போன்றே தன் வாழும் தேசத்திற்கும் கடமைப்பட்டுள்ளான். **"நன்மையான விடங்களிலும் இறைவனைப் பயந்து கொள்ளும் விடயங்களிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளுங்கள்"** பூமியின் அமைதியை கெடுக்கும் வகையில் ஒருவர் செயற்படுவதை இஸ்லாம் வன்மையாக கண்டிக்கிறது. அதே போல நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவியாளர்களாக இருக்கவும் கட்டளையிடுகிறது (அல்குர்ஆன் 5:2). **"நிச்சயமாக பூமியில் குழப்பம் செய்பவர்களை இறைவன் நேசிப்பதில்லை"** (அல்குர்ஆன்). எனவே கலாநிதி அப்துல் ஹக்கீம் ஹசன் கூறியது போல தேசத்துரோகம் அராஜகத்திலும் கூட இஸ்லாம் கட்டுப்பாடற்ற கருத்து சுதந்திரத்தை அனுமதிக்கவில்லை எனவே கருத்து சுதந்திரமானது தேசிய பாதுகாப்புக்கும் அதன் அமைதிக்கும் தீங்காக அல்லது அச்சுறுத்தலாக இருக்குமெனின் அதை இஸ்லாமும் கட்டுப்படுத்துகிறது. இதனை பின்வரும் அல்குர்ஆன் கூற்றின் மூலம் அறியலாம், **"நிச்சயமாக இறைவன் நீதியையும் நன்மையையும் கட்டளையிடுகிறான். மேலும் வெட்கக் கேடான அநாகரீகமான தீய செயல்களையும்**

***கிளர்ச்சி அடக்குமுறைகள் போன்றவற்றையும் தடை செய்கிறான்”*** *(அல்குர்ஆன் 16:90). எனவே ஒரு நாட்டிற்கு எதிராக வேணுமென்றே கிளர்ச்சி செய்வதும் சமூகத்தில் குழப்பம் விளைவிப்பதும் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. இஸ்லாமிய சட்டத்தின்படி அரசுக்கு எதிரான குற்றங்கள் கொள்கையளவில் கடுமையான தண்டனைகளுக்கு வழிவகுத்தாலும் பாதுகாப்பு தொடர்பான நெருக்கடிகளை அரசு கையாண்டால் மக்களை பழிவாங்கும் செயற்பாடுகளைவிட மாற்று வழிகளுக்கான வாய்ப்புகளை இஸ்லாம் பரிந்துரைக்கிறது (Saeed & Ahamed,2013). இஸ்லாமிய முன்னணி அறிஞரான மவ்லானா மவுதூதி வாதிடுகிறார், “முழுமையான கருத்து சுதந்திர உரிமையானது சமூகத்தின் நெறிமுறைகளுக்கும் தார்மீக விழுமியங்களுக்கு தீங்கு விளைவிக்கும்படியால் அதனை எந்தவொரு சமூகமும் எந்தவொரு சட்டமும் தாங்க முடியாது. எனவே சமூக நெறிமுறைகள் மற்றும் பாதுகாப்பு கருதி சட்ட வரம்புகளை ஏற்படுத்தல் அவசியமாகிறது (Riaz, 2016). எனவே இலங்கை அரசியலமைப்பில் விதிக்கப்பட்டுள்ள சட்ட வரம்புகளும் இஸ்லாமிய கொள்கைகளும் இவ்விடயத்தில் பெரும்பாலும் ஒருமித்து செல்வதனை அறியலாம்.*

***3.5 பொது நலன்கள் (Public Welfare)***

*இலங்கை அரசியலமைப்பின்படி பொது எனப்படும் சொல்லானது பொதுமக்களின் எந்தவொரு பிரிவினரையும் அல்லது எந்தவொரு சமூகத்தையும் குறிக்கிறது (section 12 subs by section 4 of act 5 of 2021). பொது அமைதிக்கு எதிரான குற்றங்களாக பொது சுகாதாரத்திற்கு தீங்கேற்படுத்தல், பொதுத் தொல்லை, சட்ட விரோத கூட்டம், ஆபாசமான நூல்களை விற்பனை செய்தல் அது தொடர்பில் வெளியீடுகளை வெளியிடல் அல்லது அவற்றை பொதுக்கண்காட்சிக்காக வைத்திருத்தல் என்பன குற்றவியல் பிரிவுகள்* 286, 286, 286A, 287 *போன்றவற்றில் குறிப்பிடப்படுகின்றன. 1958ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க அவதூறு மற்றும் துரோக வெளியீடுகள் ஆகியன சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளன (Country Report,2010). எனவே பொது நலன்கள் கருதி கருத்து சுதந்திரம் மீது அரசு கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்.*

*பொது நலன்கள் தொடர்பில் அதிக அக்கறை கொண்ட மார்க்கமாக இஸ்லாம் விளங்குகிறது. கருத்து சுதந்திரம் எனும் பெயரில் எந்தவொரு சூழ்நிலையிலும் இஸ்லாமிய சட்டமானது ஒழுக்கக்கேடான மற்றும் அநாகரிகமான செயல்களை அனுமதிக்காது.* **“ஒரு முறை நபியவர்கள் தன் தோழர்களிடம், சபிக்கப்படும் இருவரை விட்டும் எச்சரிக்கையாக இருங்கள் என்றார்கள். அதற்கு அத்தோழர்கள் இறைதூதரே! யார் அந்த இருவரும் எனக் கேட்க, அதற்கு நபியவர்கள், மக்கள் பயணிக்கும் பாதையில் அல்லது நிழல்தரும் இடங்களில் சிறுநீர் கழிப்பவர்கள் என்றார்கள்”** *(முஸ்லிம்). எனவே பொது சுகாதாரத்திற்கும் பொது நலன்களுக்கும தீங்கினை ஏற்படுத்தும்; செயல்கள் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளதை மேற்குறித்த ஹதீஸின் மூலம் அறியலாம். இஸ்லாத்தின் பார்வையில் நலன்கள் எனப்படுவது நலன்களைக் கொண்டு வருவதும் தீங்கினைத் தடுப்பதுமாகும். எனவே நலன்கள் அத்தியாவசிய தேவை நிலையிலுள்ளதாகவும்; முழுச்சமூகத்திற்குமானதும் மனித குலத்திற்கு மேலதிக நலன்களை தருவதாகவும் அமைந்திருத்தல் வேண்டும். இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள் சட்ட ஒழுங்குமுறைகள் மற்றும் வாழ்வியல் தத்தவங்கள் அனைத்தும் பொது நலம் குறித்து அதிக கவனம் செலுத்துகின்றது.* **“ஒரு**


ISBN: 978-624-5736-55-3

***தடவை நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் முஸ்லிம் பொது மக்களுக்கும் நலம் நாடுவது தான் மார்க்கம் என்றார்கள்" (புகாரி).***

*மஸ்லஹா தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளையும் எல்லைகளையும் ஒருவரின் கருத்து சுதந்திரம் மீறுமெனின் அவர் இஸ்லாத்தின் பார்வையில் குற்றவாளியாக கருதப்படுவார். "நிச்சயமாக நம்பிக்கையாளர்களிடையே அநாகரீகம் பரவ வேண்டும் என்று விரும்புபவர்கள் இவ்வுலகிலும் மறுமையிலும் வேதனைக்குரியவர்கள் என்பதை அல்லாஹ் அறிவான். நீங்கள் அறியமாட்டீர்கள்" (அல்குர்ஆன் 24:19). ஆபாசமான விடயங்களை மக்கள் மத்தியில் பரப்புதல், வெளியிடல் ஆகியன இஸ்லாமிய சட்டத்தில் குற்றமாக கருதப்படுவதுடன் அவை தடை செய்யப்பட்ட விடயங்களாகவும் உள்ளன. (Inasilyas,2022). எனவே கருத்து சுதந்திரத்தை இஸ்லாம் வலியுறுத்தும் அதேநேரம் பொது நலன்களுக்காக இதனை கட்டுப்படுத்துவதானது இலங்கை அரசியலமைப்பு விதிகளுடன் பெரும்பாலும் பொருந்துவதைக் காணலாம்.*

***3.6 பிறர் மரியாதை மற்றும் உரிமை***

*பேச்சு சுதந்திரத்தை ஒருவரின் மரியாதையை மீறும் வகையில் பயன்படுத்த முடியாது. இலங்கை அரசியலமைப்பு சட்டமானது நிந்தனையான பேச்சு, ஆத்திரமூட்டல், ஆபத்தான இனவெறியை தூண்டும் ஒரே மாதிரியான பேச்சுக்களை தடை செய்கிறது. அத்தகைய பேச்சுக்களில் ஈடுபடுபவர்கள் மீதான குற்றவியல் தடையை ஏற்படுத்துகிறது. அல்லாஹ் மனிதனை பிற படைப்பினங்களை விடவும் அழகான கண்ணியமிக்க படைப்பாக படைத்துள்ளான். எனவே பிறரின் கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் தீங்கு விளைவிக்கும் சுதந்திரத்தை இஸ்லாம், ஒருபோதும் அனுமதிப்பதில்லை. இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனத்தின் மூலம் அறியலாம்.* ***"நம்பிக்கையாளர்களே! உங்களில் சில ஆண்கள் மற்றவர்களைப் பார்த்து சிரிக்க வேண்டாம்: முந்தியவர்களை விட (பிந்தையவர்கள்) சிறந்தவர்களாக இருக்கலாம்.*** *எனவே மனிதர்களை மதிப்பதும் அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதும் மனித கண்ணியத்திற்கு வழங்கும் ஒரு வகை மரியாதையாகும்.* ***"இவ்வாறே நீங்கள் அவர்களுக்கு சாட்சிகளாகவும் தூதர் உங்களுக்கு சாட்சியாக இருப்பதற்காகவும் நாம் உம்மை ஒரு சமத்துவமிக்க உம்மத்தாக ஆக்கினோம்"*** *(அல்குர்ஆன் 45:29). மற்றவர்களின் உரிமையை மதித்து செயற்படும் போதே மனிதர்கள் மத்தியில் சமத்துவம் பேணப்படும். எனவே ஒருவரின் உயிர், செல்வம், சொத்து, சிந்தனை, சந்ததி ஆகியவை நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கு துணைபுரிவதால் இஸ்லாமிய சட்டமானது மனித கண்ணியம், சமத்துவம் என்ற கொள்கையின் வெளிச்சத்தில் கருத்து சுதந்திரன் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. எனவே இஸ்லாமிய சட்டத்தில் பிறர் மரியாதை, கண்ணியம் போன்ற காரணங்களுக்காக கருத்து சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதானது இலங்கை அரசியலமைப்பு விதிகளுடன் அதிக பொறுத்தப்பாடுடையதாகயிருக்கிறது.*

***3.7 பாராளுமன்ற சிறப்புரிமை (Parliamentary Privilege)***

*பாராளுமன்ற சிறப்புரிமை என்பது சில சட்டமன்ற உறுப்பினர்களால் அனுபவிக்கப்படும் சட்டப்பூர்வ விலக்காகும். பாராளுமன்ற உறுப்பினர்களின் சட்டமன்றக் கடமைகளின் போது மேற்கொள்ளப்படும் பேச்சு, செயல்கள், அறிக்கைகளுக்கு சிவில் மற்றும் குற்றவியல் பொறுப்புக்கு எதிராக பாதுகாப்பு வழங்கப்படுகிறது. பாராளுமன்றத்தினதும் அதன்*


ISBN: 978-624-5736-55-3

*உறுப்பினர்களதும் சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் தத்துவங்களையும் வெளிப்படுத்துவதற்கும் வரைவுபடுத்துவதற்கும் பாராளுமன்றச் சிறப்புரிமை மீறல்களுக்கான தண்டனைகளை வழங்குவதற்கும் பாராளுமன்ற ஆவணங்கள், அறிக்கைகள், நிகழ்சிகள், முடிவுகள், நடவடிக்கைகள் என்பவற்றை வெளியிடுவதில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்குமான சட்டமாகும் (Parliament power and privilege Act, 1978).*

*இஸ்லாமிய நோக்கின்படி கருத்துச்சுதந்திரமானது அனைவருக்குமுரிய பொதுவானதும் தார்மீக எல்லைக்குட்படுத்தப்பட்ட உரிமையாகவும் இருக்கிறது. மனிதர்கள் யாராகயிருப்பினும் அவர்களது செயல்கள் ஒருவரின் மானசீக உரிமையை பாதிக்குமெனின் அவரை கேள்விக்குட்படுத்தலாம். ஏனெனில் இத்தகைய சட்டமன்றங்களில் மேற்கொள்ளப்படும் செயல்கள், கருத்துக்கள் சமூக மற்றும் அரசியல் சீர்திருத்தங்களைத் தொடங்குவதற்கான சாத்தியங்களை ஏற்படுத்தக்கூடியதாகயிருப்பினும் சில வேளை மக்களின் கருத்துக்கள் ஒடுக்கப்படுவதற்கான வாய்ப்புகளையும் ஒருவர் மற்றவரை மானசீக ரீதியில் புண்படுத்தும் நிலைகளையும் உரிமை மீறல்களையும் தோற்றுவிக்கலாம். இஸ்லாம், சட்டமியற்றும் அதிகாரத்தின் இருப்பை நிராகரிக்காது அதிகாரத்தை மீறும் சக்தியை மறுக்கிறது.* ***"நிச்சயமாக அல்லாஹ் நீதியாக நடக்குமாறு ஏவுகிறான்"*** *(அந்-நஹ்ல்:90). பொய், அநியாயமான கருத்து சுதந்திரம் இஸ்லாமிய சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் எந்தவொறு செல்வாக்கின் கீழும் வரம்புமீறும் சுதந்திரம் அனுமதிக்கப்படுவதில்லை (Mohammed, 2009). எனவே இஸ்லாமிய சட்டத்தில் கருத்து சுதந்திரம் மீதான வரம்பு என்ற கருத்தாக்கம் இலங்கை பாராளுமன்ற சிறப்பு சட்டங்களின் பின்னணியில் கணிசமாக வேறுபடுகிறது.* ***"ஏதாவது பேசினால் நீதியாக பேசுங்கள். அதில் உங்கள் நெருங்கிய உறவினர் சம்மந்தப்பட்டிருப்பினும் சரியே"*** *(அல்-அன்ஆம்: 152). இஸ்லாமிய நீதித்துறையானது ஒரு ஆட்சியாளரிடமிருந்து ஆட்சியாளரையும் பணக்காரரை ஏழைகளிடமிருந்தும் உயர்வானவர்களை இழிவானவர்களிடமிருந்தும் பெண்ணை ஆணிலிருந்தும் அல்லது முஸ்லிமை காஃபிரிடமிருந்தும் வேறுபடுத்துவதில்லை. இந்த வேறுபாடுக்கான காரணம் இஸ்லாமிய நீதித்துறையின் முன் அனைத்து குடிமக்களும் சமமானவர்களாக கருதப்படுகின்றனர். முஹம்மது நபி (ஸல்) அவர்கள், தன் மகள் பாவம் செய்திருந்தாலும் கூட, அவளுக்கும் சட்டத்தின் தீர்ப்பு பொருந்தும் என்று சொன்னார்கள். எனவே இஸ்லாமிய நீதித்துறையில் இனம், பாலினம் அல்லது சமூக அந்தஸ்து அடிப்படையில் எந்த பாகுபாடோ எந்தவொரு சிறப்புரிமையோ இல்லை.*

### *3.8 நீதிமன்ற அவமதிப்பு (Contempt of Court)*

*நீதிமன்றங்கள் ஒரு நாட்டின் நீதி அமைப்பில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இதன் சுமூகமான செயல்பாட்டிற்கு மரியாதையளித்தல் ஒவ்வொருவரினதும் கடமையாகும். நீதிமன்ற அவமதிப்பை பொருத்தவரை சட்ட நிர்வாகத்தை அலட்சியம் அல்லது அவமரியாதை செய்தல், நீதிமன்றத்தின் போக்கில் தலையிடல், நீதிமன்ற தீர்ப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்தல், நீதி நிர்வாகத்திற்கு இடையூராக இருக்கும் நீதியின் போக்கை சிதைக்கும் எந்தவொரு நடத்தையையும் உள்ளடக்குகிறது (Rasa,2016). நீதிமன்றத்தையோ அல்லது நீதிபதியையோ அவமதித்ததற்காக அல்லது அவரது அதிகாரத்தை குறைப்பதற்காக அல்லது நீதிமன்றத்தின் சட்டரீதியிலான செயல்பாட்டில் குறுக்கிட்டதற்கான செயல்கள் அல்லது எழுத்துக்கள் இந்தக் குற்றத்தில்*


ISBN: 978-624-5736-55-3

அடங்குவதாக *Reginal perera v. The king (1951) 52 N.L.R. 293 (PC)* எனும் வழக்கில் கருதப்பட்டது. எனவே நீதிமன்ற அவமதிப்பானது கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் ஒரு காரணியாக அமைந்துள்ளதுள்ளதுடன் இவ்வதிகாரத்தை அவமதித்த குற்றத்திற்காக ஒருவர் சட்டத்தால் தண்டிக்கப்படுவார் *(Country Report, 2010).*

இமாம் ஷாபி அவர்களின் கருத்துப்படி நீதிமன்றத்தில் இடையூறுகள் ஏற்பட்டால் அவை தொடர்பில் நீதிபதி அறிவுறுத்தவும் அவற்றை தடை செய்யவும் நிலைமைகளைப் பொறுத்து தொடர்புடையவர்களை காவலில் வைக்கவும் உத்தரவிடலாம். அப்பாசிய கலீபா காலத்தில் ஒருவர் நீதிமன்ற அவமதிப்பை ஏற்படுத்தியதால் அவருக்கு தண்டனை வழங்கப்பட்டதை இஸ்லாமிய வரலாறுகளில் காண முடிகிறது. பிக்ஹ் நூல்கள் கூட நீதிமன்றத்தை அவமதிப்பது, அதன் கண்ணியத்துக்கு இழுக்கை ஏற்படுத்துவது, நீதிபதியை அவமதிப்பது போன்ற செயல்களுக்கு தண்டனையை வழங்க அனுமதிக்கின்றன *(Aaamir, 2021).* **"நம்பிக்கை கொண்டவர்களே அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள், தூதருக்கு கட்டுப்படுங்கள், உங்களில் அதிகாரம் உள்ளவர்களுக்கும் கட்டுப்படுங்கள்"** (அல்குர்ஆன் 4:59). இவ்வசனத்தில் அதிகாரம் உள்ளவர்களுக்கு கட்டுப்பட்டு நடத்தல் என்பது அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பதிலிருந்து பெறப்பட்டதாகும். நன்மையான விடயங்களில் தலைமைத்துவத்திற்கு கட்டுப்படல் ஒரு முஸ்லிமின் கடமையாகயிருக்கிறது. எனவே நீதிமன்ற முறைக்கு எதிராக தனது கருத்து சுதந்திரத்தை நியாயமின்றி வெளிப்படுத்துவது இஸ்லாமிய ரீதியிலும் குற்றமாகக் கருதப்படுகிறது. **"ஒரு முஸ்லிம் பாவமற்ற விடயங்களில் அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் செவி சாய்த்து கட்டுப்படுவது கடமையாகும். பாவச் செயலொன்றுக்கு ஏவப்பட்டால் அதற்கு கட்டுப்படவேண்டிய தேவையில்லை"** (புகாரி, முஸ்லிம்). நீதித்துறையின் சுமூகமான போக்கிற்கு பங்களிப்பு செய்தல் ஒவ்வொருவரினதும் கடமையாகும். சட்டங்களின் பின்னால் மறைந்திருக்கும் காரணங்கள் அனைத்தும் மனித நலனை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்பது சமூக நலனின் ஒரு பரிமாணமாக இருக்கிறது. மேலும் அந்நலங்கள் காலம் மற்றும் பின்விளைவுகளைக் கருத்திற் கொண்டே அமைதல் வேண்டுமென்பதால் இஸ்லாமிய ஷரீஆவுக்கு முரணில்லாத வகையில் இயற்றப்படும் சமூக ஒழுங்குகளை இஸ்லாம் வரவேற்கிறது *(Inasilyas, 2022).* எனவே நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் கருத்து சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவது இஸ்லாத்திற்கு முரணானது இல்லை. இவ்விடயத்தில் இஸ்லாமிய ஒழுங்குமுறைகளும் நாட்டின் அரசியலமைப்பு விதிகளும் நேர்மறையாக அமைந்துள்ளன.

## 4. Conclusion

இலங்கை அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம் அனைத்து குடிமக்களுக்கும் கருத்து மற்றும் வெளியீடு போன்றவற்றுக்கான சுதந்திரமுண்டு. இஸ்லாமிய சட்டத்தின்படி, சுதந்திரமாக சிந்திக்கவும் செயற்படவும் அனைத்து குடிமக்களுக்கும் உரிமையுண்டு எனினும் அது வெளிப்படுத்தப்படும் காரணத்தை கருத்திற் கொண்டு இவ்விரு சட்டங்களும் அதன் மீது சில சட்ட ரீதியான வரம்புகளை ஏற்படுத்தியுள்ளன. எனினும்; இலங்கை அரசியலமைப்பினால் குறித்துரைக்கப்படும் கருத்து சுதந்திர கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய விதிகளை விடவும் இஸ்லாமிய ஷரிஆ வலியுறுத்தும் விதிகள் தீங்கினை முன்கூட்டியே தடுத்தல், பொது நீதி, மனித

கண்ணியம், சமத்துவம் பேணல் ஆகிய அம்சங்களில் உயர்ந்த நெறிமுறைகளையும் சட்ட ஒழுங்குகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொது சுகாதாரம், ஒழுக்கம், மற்றவர்களின் உரிமைகள் மற்றும் நற்பெயருக்கான மரியாதை போன்ற சட்டபூர்வமான நோக்கத்தின் அடிப்படையில் கட்டுப்பாடு இருக்க வேண்டும் என அரசியலமைப்பு கூறுகின்றது. பாரம்பரிய இஸ்லாமிய சட்டமானது அடிப்படை மனித உரிமைகளை மீறும் எந்தவொரு பேச்சையும் வெளிப்பாட்டையும் கட்டுப்படுத்துவதுடன் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதில் தீர்க்கமான விதிகளை கொண்டுள்ளது. இஸ்லாம் வரையறுக்கும் கருத்து சுதந்திர விதிகள், இலங்கை அரசியலமைப்பில் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் விதிகளுடன் பெரும்பாலும் உடன்படுவதை ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே இஸ்லாம் வலியுறுத்தும் சட்டங்களும் போதனைகளும் மனித நலன்களை உறுதி செய்வதாக அமைந்துள்ளதால் இஸ்லாமிய சட்டமானது எல்லோருக்கும் எக்காலத்துக்கும் பொறுத்தப்பாடு உடையதாக இருக்கும் என்பதையும் இவ்வாய்வு முடிவாகக் கொள்கிறது. கருத்து சுதந்திர வரம்புகளை ஒப்பீடு செய்யும் ஆரம்ப முயற்சியாகவே இவ்வாய்வு அமைந்திருக்கிறது. இலங்கை அரசியலமைப்பினால் உறுதியளிக்கப்பட்டுள்ள கருத்து சுதந்திரம் மற்றும் வெளியீடு தொடர்புடைய ஏனைய உரிமைகள் தொடர்பில் இவ்வாய்வினை மேலும் விரிவுபடுத்தலாம். கருத்து சுதந்திர உரிமை குறித்து ஏனைய மதங்களின் நிலைப்பாடு தொடர்பிலும் ஆய்வுகளை மேற்கொள்ளலாம் போன்ற சில பரிந்துரைகளையும் இவ்வாய்வு முன்மொழிகிறது.

## References


Aaamir, Samza.(2021).Contempt of court in the light of Islamic injuctions.Zia taqleeq issue 21

Al-Raysuni, A. (2006). *Imam Al Shatibi's Theory of The Higherobjectives and Interests of Islamic Law*.The International Institute of Islamic Thought: London

An Ordinance to Provide a General Penal Code for Sri Lanka. Long Tittle am by Section 2 of Act 5 of 2021. Retrieved From https://Www.Srilankalaw.lk

Aqa, Rasa. (2016). Freedom of Speech and Expression as a Fundamental Right in India and the Test of Constitutional Regulations: The Constitutional Perspective. Retrieved From https://www.Researchgate.Net

Asanga, Welikala. (2008). A State of Permanent Crisis Constitutional Government, Fundamental Rights and States of Emergency in Sri Lanka

Bhat, A.M. (2014). Freedom of Expression from Islamic Perspective. *Journal of Media and Communication Studies, 6 (5), 69-77.*

Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka. (1978)

Country Report.(2010).freedom of expression and the nternet in Sri lanka. Retrieved from https://lirneasia.net

Inasilyas. (2022). Social welfare in the interpretation of maqasidush shariah (from the thought of kamal imam). Retrieved from https://www.rishardnajimudeen.com?p=13541

Irmgard, Marboe. (2018). Freedom of Expression: Theory and Practice in the Islamic Realm. 254-276, https://doi.org/10.1163/9789004349155-012

Kamal, Muhammad. (2010). *The Provisions in Participating in the Crime from the Islamic Jurisprudence.* An-Najah National University: Palestine

Kamali, H.M. (1997). *Freedom of Expression in Islam*. Islamic Text Society

Lombardi, B. (2013). Designing Islamic constitutions: past trends and option foa a democratic future. *International journal of constitutional law*.volume 11, issue 3, 615-645

Maher, Holi. (2008). *Freedom of Expression and Respect of Religions and Sanctities.* Islamic University in Gaza: Palestine

Mohammed, Albishir.(2009. 1st ed).*Freedom of Opinion in Islam & Legal Systems*. p.113- 114.

Mohsi, kadiver. (2012). Islam between free speech and hate speech https://freespeechdebate.com/discussion

Muqtedarkhan, M.A. (2019). *Islam and Good Governance: A Political Philosophy of Ihsan.* Palgrave Macmillan: U.K

Nihal, Jayamanne. (2004). Freedom of expression and right to information. Law net ministry of justice. Retrieved from https://www.lawnet.gov.lk/freedom-of-expression

Noor, Asma Said & Wan, Mohd Khairul Firdaus Wan Khairuldin. (2017). Freedom of Speech in Islam and Its Connection with Street Demonstrations. *International Journal of Academic Research in Business and Social Sciences Vol* 7, 04

Rafiq, Ayesha & Akthar, Naseem. (2018). Freedom of Speech in Islam and in International Conventions. *The Scholar Islamic Academic Research Journal*.4.10.29370

Riaz, Ahmed Saeed. (2016). Exploration of Freedom of Expression in Islam and Wet: Its Relation With Blasphemy and Religious Defamation. *Journal of Islamic Thought and Civilization Vol 6, 1.*

Saeed, D., & Ahamed, R. (2013). Quranic Concept of the Freedom of Expression: A Descriptive Study in Modern Socio- Political Perspective. *Al-Qalam June.*

Sri Lanka Law. (2020). Penal code. Retrieved From http://www.srilankalawnet.lk/volume-vi/penal-code-ordinance.html

Srilankan Parliament power and privilege Act, 1978

The Kuwaiti Encyclopedia of Jurisprudence, Vol. 22, p.210, Dar That Al-Salasil Publication, Kuwait, Second Edition, Retrieved from : http://shamela.ws/browse.php/book-

U.N, Universal Human Rights Declaration. Retrieved From http://www.Un.Org/En/Universal-Declaration-Human-Rights